**DEPOSITION OF WITNESS**
**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

**Calendar** :
**Miscellaneous** : **Case No.CC 51 of 2017**
**Preliminary Register** :
**Sessions** :

**Deposition of Witness for** **Prosecution : PW5**
**Defence :**
**Court :**

**Name**/பெயர் : **தனமேரி**

**Father's/ Husband Name : ஆரோக்கியதாஸ்**
தகப்பனார்/கணவர்பெயர்

**Village**/ கிராமம் :

**Taluk**/ வட்டம் :

**Caste** / இனம் :

**Calling**/ வேலை :

**Religion**/ மதம் :

**Age**/ வயது :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.02.2022.**

<u>முதல் விசாரணை</u>

**நான் பளிங்காநத்தத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 லீமா ஜோஸ்பின் எனது அக்கா மகளாவார். 1 வது எதிரி வினோத்குமார் அ.சா.1 ன் கணவர். 2 வது எதிரி எனது அக்காவின் சம்மந்தி ஆவார். 3 வது எதிரி அ.சா.1 ன் நாத்தனார் ஆவார். 4 வது எதிரி 3 வது எதிரியின்**

கணவர் ஆவார். 12.11.2014 அன்று இருதரப்பு பெரியவர்களாலும் நிச்சயக்கப்பட்ட திருமணம் அ.சா.1 லீமா ஜோஸ்பினுக்கும் 1 வது எதிரிக்கும் புறத்தாக்குடி சவேரியார் ஆலயத்தில் வைத்து நடந்தது. திருமணத்தின் போது எனது அக்கா சுமார் ஒரு இலட்சம் மதிப்புள்ள கட்டில், பீரோ போன்ற வீட்டிற்கு தேவையான பொருட்களையும், 15 பவுன் நகைகளையும் சீர்வரிசையாக கொடுத்தார். திருமணத்திற்கு பின்னர் பள்ளிவிடையில் வாடகை வீட்டில் அ.சா.1 அவரது கணவரான 1 வது எதிரி மற்றும் 2, 3, 4 வது எதிரிகளும் குடியிருந்தனர். திருமணம் நடந்த ஒரு மாதத்திற்குள்ளாக 1 வது எதிரி அ.சா.1 டம் 50,000/- பணம் பத்து பவுன் நகையும் வரதட்சனையாக கேட்டதால் அ.சா.1 க்கும் 1 வது எதிரிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. அதனால் மகளிர் காவல் நிலையத்தில் நாங்கள் புகார் அளித்தோம். அதன் மீதான விசாரணையின் போது 4 எதிரிகளும் நாங்கள் சமாதானமாக போகிறோம் அ.சா.1 யை நல்ல விதமாக வாழ வைக்கிறோம் என்று சொல்லி அழைத்து சென்றார்கள். அதன் பின்னர் ஒரு மாதத்திற்குள்ளாக அ.சா.1 டம் எதிரிகள் பிரச்சனை செய்தனர். அப்போது 2 வது எதிரி அ.சா.1 ன் தலை முடியை பிடித்து இழுத்து அடித்தார். 3 வது எதிரி அ.சா.1 ன் நைட்டியை பிடித்து இழுத்து கிழித்து அடித்தார். 4 வது எதிரி 1 வது எதிரியிடம் அ.சா.1 யை அடித்து கொன்றுவிடு அவளை வைத்திருக்காதே நான் உனக்கு வேறு திருமணம் செய்து வைக்கிறேன் என்று சொன்னார். அன்று இரவு 9 மணி போல் 1 வது எதிரி அ.சா.1 டம் நீ 50,000/- பணமும் 10 பவுன் நகையும் வரதட்சணையாக வாங்கி வந்தால் தான் உன்னை வாழ வைப்பேன் என்று சொல்லி அடித்து விரட்டிவிட்டார். அப்போது அ.சா.1 எங்களுக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நாங்கள் அ.சா.1 யை அழைத்து கொண்டு மகளிர் காவல் நிலையம் சென்றோம். அப்போது நடந்த விசாரணையில் ஆஜரான எதிரிகள் 4 பேரும் அ.சா.1 யை அழைத்து கொண்டு குமுளூரில் வீடு பார்த்து வாழ வைக்கிறோம் என்றும் குமுளூர் பஞ்சாயத்து தலைவரிடம் பேசி கொள்கிறோம் என்று சொல்லி சென்றார்கள். குமுளூர் பஞ்சாயத்து தலைவரிடம் பேச்சு வார்த்தைக்கு நாங்கள் சென்றிருந்த போது 1 வது எதிரி வினோத்குமார் அ.சா.1 னுடன் சேர்ந்து வாழமாட்டேன். அவரை அழைத்து செல்லுங்கள் என்று எங்களிடம் சொல்லிவிட்டார். நாங்கள் அ.சா.1 யை

அழைத்து கொண்டு வந்துவிட்டோம். திருமணத்தின் போது கொடுத்த கட்டில், பீரோ போன்ற சீர்வரிசை பொருட்கள் அனைத்தும் 1வது எதிரி வசமே உள்ளது. நகைகளில் தற்போது 7 பவுன் அ.சா.1 லீமா ஜோஸ்பினிடமும், 8 பவுன் 1வது எதிரியிடமும் உள்ளது. அதன் பின்னர் அ.சா.1 இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

குு.வி. (எதிரி தரப்பில்)

அ.சா.1ன் தாயார் எனது உடன் பிறந்த அக்கா ஆவார். நான் பளிங்காநத்தத்தில் தான் வசித்து வருகிறேன். நான் வசிக்கும் பளிங்காநத்தம் கிராமத்திலிருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் பள்ளிவிடை அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். 3வது எதிரி வனிதா மேரியை மகிழம்பாடி கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளது. முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள விவரங்களை தான் போலிசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அ.சா.1 லீமா ஜோஸ்பினும் அவரது தாயாரும் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் நானும் பள்ளிவிடை கிராமத்திற்கும் இலால்குடி காவல் நிலையத்திற்கும் உடன் சென்றிருந்தேன். அதனால் நடந்தது எனக்கு தெரியும். அ.சா.1 லீமாஜோஸ்பினை 2வது எதிரி தலைமுடியை பிடித்து இழுத்து அடித்ததாக சொல்வதும், 3வது எதிரி நைட்டியை பிடித்து இழுத்து அடித்ததாக சொல்வதும் எந்த நாளில் எத்தனை மணிக்கு நடந்தது என்று சொன்னால் தேதி நினைவில்லை. ஒரு நாள் இரவு 9 மணிக்கு நடந்தது. சம்பவம் உண்மையில் நடைபெறவில்லை என்பதால் தான் எந்த தேதியில் சம்பவம் நடந்தது என்று போலிசார் விசாரணையின் போது நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 லீமாஜோஸ்பின் 1வது எதிரி வினோத்குமார் ஆகியோரை வாழ வைப்பதற்காக நடந்த பஞ்சாயத்தின் போது நானும் உடன் இருந்தேன். மேற்படி பஞ்சாயத்தினை 1வது எதிரி வினோத்குமார் தான் ஏற்பாடு செய்திருந்தார் என்றால் 1வது எதிரியின் பெரியப்பா தான் ஏற்பாடு செய்திருந்தார். சமரசமாக போவதற்கு அ.சா.1ன் தரப்பில் எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னால்

சரியல்ல. அதற்காக தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். பள்ளிவிடை கிராமத் தலைவர் முன்னிலையில் நடந்த சமரச பேச்சு வார்த்தையின் போது அ.சா.1 தனக்கு வேறு ஒரு நபருடன் தொடர்பு உள்ளதாக அவரோடு தான் சேர்ந்து வாழ்வேன் என்று சொன்னார் என்றால் சரியல்ல. தற்போது அ.சா.1 வேறு நபருடன் தான் வாழ்ந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 லீமாஜோஸ்பின் 1வது எதிரியுடன் சேர்ந்து வாழ மறுத்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 லீமாஜோஸ்பின் 1வது எதிரியிடம் விவாகரத்து கேட்டு பெரம்பலூர் மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1வது எதிரி அ.சா.1 யை அடித்து காயப்படுத்தியது தொடர்பாக மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் எந்த விதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 எனது அக்காவின் மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | **Case No.CC 51 of 2017** |
| **Preliminary Register** | : | |
| **Sessions** | : | |

**Deposition of Witness for** **Prosecution : PW6**
**Defence :**
**Court :**

**Name**/பெயர் **: ராணிகுமார்**

**Father's/ Husband Name : ஆர்.செல்வராஜ்**
தகப்பனார்/கணவர்பெயர்

**Village/** கிராமம் **:**

**Taluk/** வட்டம் **:**

**Caste /** இனம் **:**

**Calling/** வேலை **:**

**Religion/** மதம் **:**

**Age/** வயது **:**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.02.2022.**

**முதல் விசாரணை**

**நான் பள்ளிவிடையில் வசித்து வருகிறேன். நான் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். பார்வை மகஜர் ஆவணத்தில் காட்டப்படும் முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 3.30, 4 மணி போல நான்**

பள்ளிவிடை எழில் நகரில் உள்ள எனது வீட்டில் இருந்த போது தெருவில் கார் வரும் சத்தம் கேட்டு வெளியில் சென்று பார்த்தேன். அப்போது போலிசார் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். போலிசார் என்னிடம் வினோத்குமார் வீடு எங்கு உள்ளது என்று கேட்டார்கள். நாங்கள் எங்களது வீட்டிற்கு குடிவந்து 15 நாட்களே ஆனதால் வினோத்குமாரின் வீடு பூட்டியே இருந்தது என்று சொன்னேன். வினோத்குமாரின் வீட்டில் எதுவும் சண்டை நடந்ததா என்று கேட்டார்கள் நாங்கள் சமீபத்தில் குடி வந்ததால் அது பற்றி தெரியாது என்று சொன்னேன். அப்போது போலிசார் என்னிடம் விசாரணைக்காக வந்ததாக சொல்லி கையொப்பம் ஒன்று கேட்டார்கள். பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

<u>கு.வி (அரசு தரப்பு)</u>

கடந்த 25.11.2015 அன்று மாலை 5 மணியளவில் இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய போலிசார் வழக்கின் சம்பவ இடமான பள்ளிவிடை எழில் நகரில் உள்ள 1வது எதிரி வீட்டிற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அப்போது நான் போலிசார் தயார் செய்த பார்வை மகஜரில் முதலாவதாக சாட்சி கையொப்பம் போட்டேன் என்று போலிசார் விசாரணையில் தெரிவித்து விட்டு தற்போது எதிரிகள் எங்கள் தெருவைச் சேர்ந்தவர்கள் என்றால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கி றேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>கு.வி. (எதிரிகள் தரப்பில்)</u>

எனக்கு அசோக்குமார் த/பெ.வேணுகோபால் என்பவரை யார் என்று தெரியாது. மேற்படி அசோக்குமார் என்ற நபருடன் சேர்ந்து நான் பார்வை

**மகஜர் ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்று போலிசாரிடம் நான் அளித்த வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்டதாக கூறப்பட்டிருந்தால் அது தவறாகும்.**